முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்! அக்டோபர் 22 - ஞாயிறு அன்று

# திருவண்ணாமலையில் - வடக்கு மண்டல வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 22-03- 2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு. கழக மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாகச் சரிபார்க்கப் பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரை யின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடிப்

பொறுப்பாளர்களுக்கென "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) ஒரு நாள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்" நடத்திட முடிவெடுக்கப் பட்டு, கடந்த ஜூலை 26, ஆகஸ்ட் 17 மற்றும் செப்டம்பர் 24 ஆகிய நாட்களில் திருச்சி, இராமநாதபுரம் மற்றும் காங்கேயத்தில் முறையே டெல்டா ,தென் மற்றும் மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடை பெற்று முடிந்ததைத் தொடர்ந்து, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் "வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்" வருகிற அக்டோபர் 22 அன்று திருவண்ணாமலை மாவட்டம் 606611, திருவண்ணாமலை ஒன்றியம், மலப்பாம்பாடி ஊராட்சியில் உள்ள அருணாச்சலம் நகரில் அமைந்துள்ள "கலைஞர் திடலில்", முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றிட நடை பெற உள்ளது.

வடக்கு மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 13 கழக மாவட்டங்களின் மாவட்டக் கழகச் செயலாளர்கள், தமது மாவட்டங்க ளுக்குட்பட்ட 'வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) கூட்டத்தை' கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பா ளர்கள் (BLA 2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளைச் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

1. திருவண்ணாமலை வடக்கு
2. திருவண்ணாமலை தெற்கு
3. தர்மபுரி கிழக்கு
4. தர்மபுரி மேற்கு
5. கள்ளக்குறிச்சி வடக்கு
6. கள்ளக்குறிச்சி தெற்கு
7. கிருஷ்ணகிரி கிழக்கு
8. கிருஷ்ணகிரி மேற்கு
9. திருப்பத்தூர்
10. இராணிப்பேட்டை
11. வேலூர்
12. விழுப்புரம் வடக்கு
13. விழுப்புரம் தெற்கு

"அண்ணா அறிவாலயம்"
சென்னை18.
நாள்: 16-10- 2023.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.




சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று முன்தினம் (16.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மற்றும் செவிலியர், தாதியர் குழுமம் இணைந்து நடத்தும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியில், சவுதி அரேபிய அமைச்சகத்தின் செவிலியர் பணிக்கு தேர்ச்சி பெற்ற செவிலியர்களுக்கு சவுதி அரேபியா செல்வதற்கு பயணக் கோப்பினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவன நிர்வாக இயக்குநர் முனைவர் மகேஸ்வரன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (16.10.2023), சென்னை, சைதாப்பேட்டையில், கனமழையின் காரணமாக பெட்ரோல் பங்கின் மேற்கூரை இடிந்து விபத்தில் காயமடைந்தவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து, ஒரு வாரத்திற்கு மேல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 8 நபர்களுக்கு தலா ரூ.12.700–ம் 3 நாட்களுக்கு மேல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 3 பேருக்கு தலா ரூ.4,300–ம் விபத்தில் இறந்த ஒருவரின் குடும்பத்தினருக்கு ரூ.4,00,000/ வழங்கினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கியூரி, மாம்பலம் வட்டாட்சியர் திருமதி.பாலாஜி பாரதி, மாமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன், மோகன்குமார் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியளவில்

# கலைஞர் நூற்றாண்டு விழா மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி!

## டாக்டர் எ.வ.வே.கம்பன், கு.கருணாநிதி தொடங்கி வைத்து மாணவர்களுக்கு பரிசளித்தனர்!

திருவண்ணாமலை, அக். 19 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பொறியியல் மாணவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பேச்சுப்போட்டி திருவண்ணாமலையில் நடைபெற்றது. திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற பேச்சுப்போட்டியினை டாக்டர் எ.வ.வே. கம்பன், கு.கருணாநிதி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்றும், பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பொறியியல் மாணவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பேச்சுப் போட்டி நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டு, கலசப்பாக்கம், செங்கம், கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிகளில், தொகுதி வாரிய போட்டிகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து...

16.10.2023 திங்கட்கிழமை காலை 10.30மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொறியியல் கல்லூரி, தொழிற்நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்கள் பங்கேற்கும் மாபெரும் பேச்சுப்போட்டி நடைபெற்றது.

பேச்சுப்போட்டிக்கு பொறியாளர்அணி மாவட்ட அமைப்பாளர் சி.ராம்காந்த் தலைமை வகித்தார்.

மாவட்ட துணை அமைப்பாளர்கள் ச.பிரகாஷ், மு.தினேஷ்பாபு, த. ரகுபதி, தா.சண்முகம், டி. என்.பி.வினோத்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தலைவர் அ.மோகன்ராஜ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பேச்சுப்போட்டியில் கலந்துகொண்டு கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் பேச்சுப்போட்டியினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். கலந்து கொண்ட மாணவர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

மாநில பொறியாளர் அணி செயலாளர் கு. கருணாநிதி வாழ்த்தி பேசினார்.

வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட துணை செயலாளரும் செங்கம் சட்டமன்ற உறுப்பினருமான மு.பெ. கிரி ஆகியோர் மாணவர்களை வாழ்த்தி பேசினர்.

" 'தொழில்நுட்ப கல்விக்குத் தோள்கொடுத்த கலைஞர்', தொழில்துறையை உயர்த்திய தமிழினத் தலைவர்', திராவிட மாடலும் திறன்மிக்கக் கல்வியும்', தெற்குச்சூரியன்', கலைஞரும் தமிழும்'" ஆகிய ஐந்து தலைப்புகளில் பேச்சுப் போட்டிகள் நடைபெற்றது.

பேச்சுப்போட்டியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட பொருளாளர் எஸ். பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், பொன்.தனுசு, ஜெ.மெய்கண்டன், ஏ.டபள்யு.சர்கார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ். பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், ஒன்றிய செயலாளர்கள் வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், சி.மாரிமுத்து, பெ. கோவிந்தன், த.செந்தில்குமார், இரா.ராஜேந்திரன், பேரூர் செயலாளர் மு.அன்பழகன், பொதுக்குழு உறுப்பிர் க.பிரபாகரன், மோட்டூர் பாலு, ஒன்றியக்குழுத் தலைவர் தமயந்திஏழுமலை, மாவட்ட துணை அமைப்பாளர் டி. எம்.கலையரசன், நகர துணை செயலாளர் வட்டி அருணாசலம், ஆ.தே.முருகையன், ஆர்.வெங்கடேஷ் மற்றும் பேச்சுப்போட்டியில் இளங்கலை, முதுகலை பயிலும் பொறியியல் மாணவர்கள், தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள், தொழிற் பயிற்சி மைய மாணவர்கள் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பேச்சுப்போட்டியின் நடுவர்களாக பேச்சருவி கு. சபரி, பேராசிரியர் சு.பிரேம்குமார், பேராசிரியர் கு. லட்சுமி, அஜ்மல் (எ) முத்தமிழன் ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியினை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் மங்கலம் பிரபாகரன் தொகுத்து வழங்கினார்.

பேச்சுப்போட்டியில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சிறப்பு பரிசுகளும், சிற்றுண்டி மற்றும் மதிய உணவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சட்டமன்ற அளவில் முதல் பரிசு ரூ.10,000/மும், இரண்டாவது பரிசு ரூ.5,000/மும், மூன்றாவது பரிசு ரூ.3,000/மும் வழங்கப்படவுள்ளது. சட்டமன்றத் தொகுதியளவில் வெற்றி பெறும் போட்டியாளர்கள், மண்டல அளவிலான போட்டிகளுக்கும், மண்டல அளவில் வெற்றிபெறும் போட்டியாளர்கள் மாநில அளவிலான போட்டிகளுக்கும் தகுதியுடையவர்கள் ஆவார்கள். இறுதிச் சுற்றில் வெல்பவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் ரூ.5 இலட்சம் பரிசும், சுழற்கோப்பையும் பெறுவார்.

நிறைவாக மாவட்ட துணை அமைப்பாளர் து.மணியரசு நன்றி கூறினார்.

முன்னதாக செல்லங்குப்பம் சுப்பிரமணியின் நாட்டுப்புற பாடல்கள் நிகழ்ச்சி நடைபெற்றது.



முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தி.மு.க சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தலைவர், துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம் சேலம் ஓட்டல் ரேடிசனில் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டம் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், அருள்மொழி, கே.எம்.தண்டபாணி, தாமரைச் செல்வன், துணை செயலாளர் பச்சையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சரவணன், கவிகணேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

ஏழை, எளியோர் நலன் காப்பதில்

# இந்தியாவிற்கே முன்னோடியாக திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, அக்.18-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கடையக்குடி ஊராட்சி, பெருங்குடி கிராமத்தில் வருவாய் துறையின் சார்பில் 59விளிம்பு நிலை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகளை அமைச்சர் எஸ்.ரகுபதி 13.10.2023 அன்று வழங்கினார்.

பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது: -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளியோர் நலன் காப்பதில் ஏராளமான நலத்திட்டங்களை இந்தியாவிற்கே முன்னோடியாக தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் என்றால் அது மிகையல்ல. இத்தகைய திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் ஏழை, எளிய பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் பொருளாதாரம் உயர்வதற்கு வழிவகை ஏற்படுகிறது. அதன்படி, வருவாய் துறையின் சார்பில், விளிம்பு நிலை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ், அவர்களின் நீண்ட கால கனவினை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கடையக்குடி ஊராட்சி, பெருங்குடி கிராமத்தில் விளிம்பு நிலையில் உள்ள 59 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட வீட்டு மனைப் பட்டா பெற்ற பயனாளிகளுக்கு விலையில்லா வீடுகள் கட்டி தருவதற்கு உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.எனவே பொதுமக்கள், அனைவரும் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற பல்வேறு நலத் திட்டங்களை உரிய முறையில் பெற்று முன்னேற்றம் அடைய வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மா. செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு(எ)சிதம்பரம், வட்டாட்சியர் புவியரசன், வட்டார வளர்ச்சி அலுவலர் சிங்காரவேலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்

# சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 275ஆவது கூட்டம்!

## குழுமத்தின் நடவடிக்கைகள் குறித்து முக்கிய முடிவுகள்!

சென்னை, அக். 18 -

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (16.10.2023) சென்னைப் பெருநகர வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் 275 ஆவது குழுமக் கூட்டம் நடைபெற்றது.

இக்குழுமக் கூட்டத்தில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அமைச்சர் அவர்களால் 2023-2024ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் 27 திட்டங்களுக்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு நிதி ஒப்புதல் வழங்குவது குறித்தும், புதிதாக கட்டப்பட்டு வரும் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் சாலை வசதிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் அமைப்பதற்கு நிதி ஒப்புதல் வழங்குவது குறித்தும்,

சென்னை பெருநகர எல்லைக்குள் நில உபயோக மாற்ற விண்ணப்பங்களின் மீது பரிசீலிப்பது குறித்தும் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிர்வாக நடவடிக்கைகள் குறித்தும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.




தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் வீட்டு வசதி வாரியக் கூட்டம் கோயம்பேடு வாரியத் தலைமை அலுவலகத்தில் நேற்று (17.10.2023) நடைபெற்றது. இதில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா வீட்டு வசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் சரவணவேல்ராஜ், சென்னை பெருநகர வளர்ச்சி குழும உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா, நகர ஊரமைப்பு இயக்க துறை இயக்குநர் கணேசன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் பி.சங்கர், நிதித்துறை துணை செயலாளர் சிபி ஆதித்யா செந்தில்குமார், வாரிய நிதி ஆலோசகர் கோவிந்தராஜ், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் சரவணமூர்த்தி, தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன், வீட்டு வசதி வாரிய தலைமை வருவாய் அலுவலர் புண்ணியகோடி, பெருநகர சென்னை மாநகராட்சி மாவட்ட வருவாய் அலுவலர் குலாம் ஜிலானி பாப்பா, மாவட்ட வருவாய் அலுவலர்(திட்டங்கள்) திருமதி. ஃபர்கத் பேகம், மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) அன்பழகன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.